விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 26 சனிக்கிழமை (09.06.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 172

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்து

## தமிழர்கள் வெளியேற்றப்பட்டமை விடுதலைப்புலிகள் கண்டனம்

(கிளிநொச்சி)

தமிழ் மக்கள்ளத் தலைநகர் கொழும்பிலிருந்து பலவந்தமாக வெளியேற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நடவடிக்கைக்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மனித உரிமை விவகாரங்களுக்கான பேச்சாளர் நவரூபன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அரசாங்கத்தால் கொழும்பு நகரில் வசித்து வந்த தமிழர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு வடக்கு–கிழக்குப் பகுதிக்கு திருப்பி அனுப்பியமையானது இனப்படுகொலையின் மற்றொரு (06 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் நடவடிக்கைக்கு அமெரிக்காவும் கண்டனம்

(கொழும்பு)

தலைநகர் கொழும்பிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்டமைக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது. கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கொழும்பிலிருந்து தமிழர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமைக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவிக்கின்றது. இலங்கைக்குள் அந் நாட்டின் குடி மக்கள் ஒவ்வொருவரும் சுதந்திரமாக நடமாட அரசியல் யாப்பு வழங்கியுள்ள உரிமையை இது மீறுவதாகும்.

பயங்கரவாதத்துக்கு எதிராகத் தன்னைப் பாதுகாக்க இலங்கை (06 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர்களை வெளியேற்ற உயர் நீதிமன்றம் தடை

(கொழும்பு)

***கொழும்பிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்படுவதற்கு உயர் நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பித்ததுள்ளது. உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.***

நேற்று முன்தினம் கொழும்பில் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளிலுள்ள விடுதிகளிலிருந்து நூற்றுக்கணக்கான தமிழர்கள் முன்னறி வித்தலின்றி ஆயுதம் தாங்கிய பொலிஸாரால் வெளியேற்றப்பட்டு மோதல்கள் இடம் பெறும் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்குப் பலவந்தமாக அனுப்பப்பட்டனர்.

இந் நடைமுறையானது இலங்கை அரசியலமைப்புக்கு முரணான செயல் எனவும் மனித உரிமைமீறல் எனவும் குற்றஞ்சாட்டி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் என்ற அரச சார்பற்ற அமைப்பு நேற்று உயர் நீதி மன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தது.

இம்மனுவை (06 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா வந்தவர்கள் விரும்பிய இடத்திற்கு செல்ல அனுமதி

(கொழும்பு)

கொழும்பில் தனியார் விடுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்டு வவுனியாவுக்குக் கொண்டுவரப்பட்ட 272 தமிழ் மக்கள் விசாரணைகளின் பின்னர் கொழும்பு, திருகோணமலை, மன்னார் போன்ற இடங்களுக்குப் பாதுகாப் (06 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களை வெளியேற்றியதற்கு எதிராக கொழும்பில் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

கொழும்பு விடுதிகளில் இருந்து தமிழ் மக்கள் நேற்றுமுன்தினம் அகற்றப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுக் கொழும்பு லிப்ரன் சுற்றுவட்டத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இவ் ஆர்ப்பாட்டத்தினை மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையம், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், சுதந்திரஊடக இயக்கம், இன்.போமனித உரிமைகள் ஆவணப்படுத்தல் நிலையம், மனித உரிமைகளுக்கான நிறுவகம், அனைத்துவிதமான இன ஒடுக்கலுக்கும் எதிரான சர்வதேச இயக்கம், சட்டம் மற்றும் சமூக நிதியம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

இவ் எதிர்ப்புப் போராட்டத்தில் அரசியல் பிரமுகர்கள், தேசப்பற்றாளர்கள், பொது அமைப்பைச் சார்ந்த பிரமுகர்கள், சகல இன மக்கள் என பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா கருத்துத் தெரிவிக்கையில், (06 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்கள் வெளியேற்றப்பட்ட விடயம்

## பொலிஸ் மா அதிபரிடம் விளக்கம் கோருகிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிஸ் மா அதிபரிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விளக்கம் கோரியுள்ளதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழர்கள் வெளியேற்றப்பட்ட விடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிவில் அமைப்புக்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் ஊடகங்கள் தெரிவித்த கருத்துக்கள் குறித்து ஜனாதிபதியின் கவனம் திரும்பியிருப்பதாகவும் இதன் பிரகாரம் இந்த விடயம் தொடர்பான உடனடி விளக்கமளிக்கும் வகை (06 ஆம் பக்கம் பார்க்க)

## பிரி.அமைச்சர் வருகிறார்

இதுகுறித்து ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்த விடயம் தொடர்பான உடனடி விளக்கமளிக்கும் வகை (06 ஆம் பக்கம் பார்க்க)

ஆவணப்படுத்தல் நிலையம், மனித உரிமைகளுக்கான நிறுவகம், அனைத்துவிதமான

உறுப்பினர் மாவை. சேனாதிராஜா கருத்துத் தெரிவிக்கையில், (06 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கு எவ்வாறு மீட்கப்பட்டதோ வடக்கும் அவ்வாறே மீட்கப்படும்

## கண்டி மயிலப்பிட்டியவில் ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கு மக்களுக்கு சுதந்திரமாக வாழும் உரிமையைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவை எமக்குள்ளது. கிழக்கு வாழ் மக்களுக்குச் சுதந்திரமாக வாழும் உரிமை எவ்வாறு பெற்றுக் கொடுக்கப்பட்டதோ, அவ்வாறே வடக்கு வாழ் மக்களின் சுதந்திரமான வாழ்வுக்குரிய உரிமையும் பெற்றுக் கொடுக்கப்படும். பயங்கரவாதம் தோற்கடிக்கப்படும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மக்களுக்குச் சிறந்த எதிர்காலம் ஏற்படுத்தப்பட வேண்டும். யுத்தம் அரசியல்நோக்குடனோ அரசியல் இலாபம் கருதியோ முன்னெடுக்கப்படவில்லை. நாட்டில் அனைத்து இன மக்களும் சுதந்திரமாகவும் அமைதியாகவும் வாழ வேண்டும் என்பதற்காகவே யுத்தம் முன்னெடுக்கப்படுகின்றது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (02 ஆம் பக்கம் பார்க்க)

## பிரி.அமைச்சர் வருகிறார்

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் கிங்கோவல்ஸ் எதிர்வரும் திங்கட்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக இலங்கைக்கான பிரித்தானிய தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகை தரும் அவர், இனப்பிரச்சினை தொடர்பில் ஆராய்வார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-3)

## வ.பி.போ.ச.பணியாளரை காணவில்லை-சேவை நிறுத்தம்

தீவகப் பகுதியில் போக்குவரத்துச் சேவைப் பணியாளர் ஒருவர் காணாமல் போனதனையடுத்து நேற்று போக்குவரத்துச் சேவைகள் யாவும் ஸ்தம்பிதமடைந்தன. ம. பிரதீபன் (வயது-33)என்பவரே நேற்று முந்தினம் காணாமல் போயுள்ளார். (ச-3)

## புத்தளத்தில் 9 சடலங்கள் உருக்குலைந்த நிலையில் மீட்பு

(கொழும்பு)

இலங்கையின் வட மேல் மாகாணத்திலுள்ள புத்தளம் மாவட்டம் வென்னப்புவப் பிரதேசத்தில் நேற்று மாலை கைகள், கண்கள் கட்டப்பட்ட நிலையில் 2 பெண்கள் உட்பட 9 பேரது சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தும்மலதெனிய பாலத்திற்கு அருகாமையிலுள்ள புதருக்குள் இருந்து கண்டெடுக்கப்பட்ட இந்தச் சடலங்கள் உருக்குலைந்த நிலையில் காணப்பட்டதாகவும் விறகு சேகரிக்கச் சென்றிருந்த பெண் ஒருவர் கொடுத்த தகவலையடுத்து அந்தப் பகுதியில் சோதனை நடத்திய பொலிஸார் 4 இடங்களிலிருந்து இவற்றைக் கண்டெடுத்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

சடலங்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. இவர்கள் பத்து நாள்களுக்கு முன்பு கொல்லப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் (06 ஆம் பக்கம் பார்க்க)

## ★ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ★

## துணைவேந்தர் பதவிக்கு நான்கு பேர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புதிய துணைவேந்தரை நியமிப்பதற்கான விண்ணப்பங்களை சிபார்சு செய்வதற்காகப் பல்கலைக்கழகப் பேரவை எதிர்வரும் 21 ஆம் திகதி கூடவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு புதிய துணைவேந்தரை நியமிப்பதற்கான விண்ணப்ப முடிபுத் திகதி நேற்று முடிபடைந்தது. துணைவேந்தர் பதவிக்கு நால்வர் விண்ணப்பித்துள்ளதாக அறிய முடிகின்றது.

இவர்களில் தற்போதைய பதில் துணைவேந்தரும் விஞ்ஞானத்துறை பீடாதிபதியுமான பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல், உயர் பட்டப் படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர் எஸ். கந்தசாமி, சமூக (06 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## உணவுப் பொருள் விநியோக கலந்துரையாடல் நாளை

(யாழ்ப்பாணம்)

உணவுப் பொருட்கள் விநியோகம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை பி.ப.2.30 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் ப.நோ.கூ.சங்க தலைவர், பொதுமுகாமையாளர்கள், பிரதேச செயலர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், நுகர்வோர்பாதுகாப்புச்சபை உத்தியோகத்தர்கள் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

அத்துடன் ப.நோ.கூ.சங்கங்களால் நிலுவையாக செலுத்தப்படவேண்டிய மிகுதிக் கொடுப்பனவுக்குரிய காசோலையை மேற்படி கலந்துரையாடலுக்கு முன்னதாக கையளிக்க நடவடிக்கை எடுக்குமாறும் அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (ந-5)

## குருநகர் நீர் விநியோகம் இன்றும் நாளையும் தடைப்படும்

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட குருநகரில் அமைந்துள்ள நீர்த்தாங்கியிலிருந்து மக்களிற்கு விநியோகிக்கப்படும் குடிநீர் இன்றும் நாளையும் தடைப்பட்டிருக்குமென மாநகர சபை ஆணையாளர் மு.செ. சரவணபவ அறிவித்துள்ளார்.

குறித்த நீர்த்தாங்கிக்கு நீர் வழங்கும் குழாயில் சேதம் ஏற்பட்டமையினால் அதனைத் திருத்தும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். திருத்த வேலைகள் முடிவுற்றதும் வழமை போன்று நீர் வழங்கல் மேற்கொள்ளப்படுமெனவும் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ந)

## மஹோற்சவம்

அருள்மிகு உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திர சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 28 ஆம் திகதி சப்பறத்திருவிழாவும் 29 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 30 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ந-3)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அகாஷியை நேற்றுச் சந்தித்தனர்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தை யோசனைகளை பெயரளவிலேயே முன்வைத்துள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் யப்பான் விசேட தூதுவர் யசூசி அகாஷியிடம் தெரிவித்துள்ளனர்.

யப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷியுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்விடயங்களை அகாஷியின் கவனத்திற்குக் கொண்டு வந்ததாகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இச் சந்திப்பு நேற்றுப் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 3.30 மணிவரை யப்பானியத் தூதரகத்தில் நடைபெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், தங்கேஸ்வரி மற்றும் பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் இதன்போது கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் இராணுவத் தளபதி ஆகியோர் கிழக்கு மாகாணத்தை இராணுவ நடவடிக்கையின் மூலம் விடுவித்ததனைப் போன்று வடக்குப் பிரதேசத்தை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்த கருத்துக்கள் அரசாங்கம் இராணுவத் தீர்விலேயே நாட்டமுள்ளவர்களாக இருப்பதை உணர்த்துவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்போது இலங்கையின் சூழ்நிலை குறித்து ஐரோப்பிய ஒன்றியமும் யப்பானும் கவனத்தில் கொண்டு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தத்தினைக் கொடுக்க வேண்டு எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டனர்.

யப்பான் வழங்கி வரும் மனிதாபிமான உதவிகளைத் தவிர இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் சிலவற்றைக் கொண்டு வர வேண்டும் எனவும் இதனாலேயே தற்போதைய பிரச்சினையின் ஆழம் மற்றும் தாற்பரியம் ஆகியவற்றை இலங்கை அரசாங்கம் உணர்ந்து செயற்படும் எனவும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அகாஷியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். (ந-3)

## தேசிய கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரியில் டிப்ளோமா முடித்தவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதற்கான நேர்முகப்பரீட்சை இன்றும் நாளையும் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாகவும் சித்தியடைந்தவர்களை உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறும் யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

## பரமேஸ்வரக் குருக்களின் நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் ஏனைய குருகுல அமைப்புக்களுடன் இணைந்து நடாத்தும் அமரர் சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்களின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு ஆனைப்பந்தி குருகுல தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் ப.கோபாலகிருஸ்ண ஐயர் தலைமையில் நடைபெறும் இந் நினைவஞ்சலிக் கூட்டத்தில் நினைவுப் பேருரைகளும் முகவர்த்த நிர்ணயம் நூல் வெளியீடும் இடம் பெறவுள்ளது. (ந-3)

## மருந்துக் கலவையாளர் போட்டிப்பரீட்சை நாளை

(யாழ்ப்பாணம்)

இன்று யாழ்.போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சி நிலையத்தில் நடைபெறுவதாக இருந்த மருந்துக் கலவையாளர் போட்டிப் பரீட்சை நாளை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கப்பல் கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

யாழ்–திருமலை கப்பல் பிரயாணக் கட்டணம் ரூபா 500 ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய இதுவரை ரூபா 2250 ஆக இருந்த ஒரு வழிப் பயணக்கட்டணம் ரூபா 2750 ஆக அதிகரிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஏ-9 பாதை மூடப்பட்டபின் கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டபொழுது பிரயாணிகளுக்கு இலவச சேவை வழங்கப்பட்டமைகுறிப்பிடத்தக்கது. (அ-5)

## விடிவெள்ளி முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

புத்தூர் மேற்கு விடிவெள்ளி முன்பள்ளி விளையாட்டு விழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு முன்பள்ளி முன்றலில் நடைபெறவுள்ளது.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக அபிவிருத்தி மன்றத்தின் தலைவி திருமதி நவநீதம் ஜெக்தீசன் கலந்து கொள்ளவுள்ளார். (ந-3)

## "ஊக்கி" சஞ்சிகை வெளியீட்டுவிழா

இலங்கை வங்கி யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகத்தினால் வெளியிடப்படும் 'ஊக்கி' சஞ்சிகை வெளியீட்டு விழா நாளை காலை 9 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவுநிலையத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன். சிறப்பு விருந்தினராக யாழ்.பிரதேச செயலர் பி.செந்தில் நந்தனன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-3)

# கிழக்கு எவ்வாறு மீட்கப்பட்டதோ...

அனைத்துப் பிரச்சினைகளையும் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள முடியும். தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளது. நேர்மையான பேச்சுவார்த்தைக்கு நாம் எப்போதும் தயார். ஆனால் பயங்கரவாதம் வளர்வதற்கும் அதற்கான நடைமுறைகள், செயற்பாடுகள் கட்டியெழுப்பப்படுவதற்கும் எம்மால் இடமளிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

நாட்டுக்காக உயிர்நீத்த முப்படை வீரர்களை நினைவு கூரும் தேசிய தினம் கண்டி, மயிலப்பிட்டியவில அமைந்துள்ள இராணுவப் பூங்காவில் நேற்று முன்தினம் மாலை அனுஷ்டிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேசுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முப்படைகளின் தளபதிகள், மாகாண ஆளுநர்கள் உட்பட பலர் கலந்து கொண்ட இந் நிகழ்வில் ஜனாதிபதி மேலும் கூறுகையில்,

எமது நோக்கம் என்ன? என்பதை நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. வடக்குக் கிழக்கு வாழ் மக்களுக்கு சுதந்திரமாக வாழும் உரிமையை பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது. அதற்காக நாம் பாரிய முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

கிழக்கு எவ்வாறு மீட்கப்பட்டதோ அவ்வாறே வடக்கும் மீட்கப்படும். இந்த நாட்டை பாதுகாத்து பிரிவினைவாதத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டும். நாடு இரண்டாகப் பிரிவதைத் தடுக்க நாம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம். போலியான உடன்படிக்கைகளில் நாம் கைச்சாத்திடமாட்டோம். அதற்கான தேவையும் எமக்கு இல்லை. முப்படையினரும் பெற்று வரும் வெற்றிகளை தாரைவார்த்துக் கொடுக்கவும் நாட்டை காட்டிக் கொடுக்கவும் நாம் தயார் இல்லை.

தாய் நாட்டை பாதுகாக்கும் போராட்டத்தில் நாம் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. படை வீரர்களுக்கு தேவையான வீட்டு வசதி உட்பட அனைத்துத் தேவைகளும் அரசாங்கத்தால் நிறைவேற்றிக் கொடுக்கப்படும். படை வீரர்கள் தொடர்பில் நாம் உயர்வான எண்ணம் கொள்ளவேண்டும். படையினர் யுத்தம் செய்யும் பணியோடு மனிதாபிமான பணிகளையும் முன்னெடுக்கின்றனர். எனவே அவர்களை கௌரவிக்கும் உயர்வான எண்ணம் எமக்குள் வர வேண்டும் என்றார். (ந-5)


Calling for Tenders-Teaching Hospital,Jaffna

**Modification and renovation of diabetic centre**

01. The Chairman of the divisional tender board, Teaching Hospital, Jaffna will receive sealed tenders for modification and renovation of diabetic centre up to 10 a.m on 20.06.2007.Tender forms may be collected from Director, Teaching Hospital, Jaffna up to 14.06.2007 on payment on nonrefundable deposit of 2000/=

02. Tenders will be opened immediately after closing at the office of the Director,Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representatives are requested to be present at the opening of tenders.

03. Tender forms are issued only t0 contractors having valid registration in grade M 8 and above in the field of building construction and other institute of construction training and development (ICTAD) criteria and valid membership of National Construction Contractors Association of Sri Lanka. (NCCASL).

04. Sealed tenders may be despatched either by registered post or hand delivered to Director, T.H.Jaffna of deposited in the tender box at Teaching Hospital, Jaffna on or before 10 a.m on 20.06.2007

05. Tender documents may be inspected free of charge at the resident Engineer's office CECB, T.H.Jaffna.

06. For further details please contact Hospital Secretary, T.H. Jaffna.

*The Chairman,*
*Divisional Tender Board,*
*Teaching Hospital,*
*Jaffna.*

Date: 06.06.2007 (C-155)

Calling for Tenders-Teaching Hospital,Jaffna

**Reconstruction of NTS site Drain**

01. The Chairman of the divisional tender board, Teaching Hospital, Jaffna will receive sealed tenders for reconstruction of NTS site drain up to 10 a.m on 20.06.2007.Tender forms may be collected from Director, Teaching Hospital, Jaffna up to 14.06.2007 on payment of nonrefundable deposit of 1000/=

02. Tenders will be opened immediately after closing at the office of the Director,Teaching Hospital, Jaffna. Tenderers or their-authorized representatives are requested to be present at the opening of tenders.

03. Tender forms are issued only contractors having valid registration in grade M 9 and above in the field of building construction and other institute of construction training and development (ICTAD) criteria and valid membership of National Construction Contractors Association of Sri Lanka. (NCCASL)

04. Sealed tenders may be despatched either by registered post or hand delivered to Director, T.H.Jaffna or deposited in the tender box at Teaching Hospital, Jaffna on or before 10 a.m on 20.06.2007

05. Tender documents may be inspected free of charge at the resident Engineer's office CECB, T.H.Jaffna.

06. For further details please contact Hospital Secretary, T.H. Jaffna.

*The Chairman,*
*Divisional Tender Board,*
*Teaching Hospital,*
*Jaffna.*

*Date: 06.06.2007* (C-156)

## இன்று ஒரு தகவல்

# நாய்கள் ஜாக்கிரதை

ஒரு மனிதனைப் பார்த்து 'என்னிடம் வாலாட்டாதே' என்று சொன்னால்... அவன் நம்மிடம் ஏதோ வம்புக்கு வருகிறான் என்று அர்த்தம்.

ஒரு நாயைப் பார்த்து யாரும் என்னிடம் வாலாட்டாதே என்று சொல்வது இல்லை. ஏனென்றால் நாய் வாலாட்டினால் அது நம்மிடம் தன்னுடைய நன்றியைத் தெரிவிப்பதாக நினைத்துக்கொண்டிருக்கிறோம். அப்படி இல்லை என்கிறார்கள் அது சம்பந்தமான நிபுணர்கள்.

ஒரு நாய் தன்னுடைய வாலை இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாய், இப்படியும் அப்படியுமாய் ஆட்டிக்கொண்டிருந்தால் அது பதற்றத்தினால் கூட இருக்கலாம். நாய் நட்பாக இருந்தாலும் வாலாட்டும். கோபத்துடன் இருந்தாலும் வாலாட்டும். மகிழ்ச்சியாக இருந்தாலும் வாலாட்டும். குழப்பத்திலே இருந்தாலும் வாலாட்டும். அதைத் தப்பாகப் புரிந்துகொண்டு அதனிடம் போய் மாட்டிக்கொள்ளக்கூடாது.

'நாயைப் பற்றி எனக்கு நல்லாய் தெரியும்' என்று சொல்பவர்கள் கூட அதனிடம் கடிவாங்கிக்கொண்டு வந்து நிற்கிறார்கள். இதுபற்றி நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

எப்பொழுதுமே நாய்கள் திடீரென வந்து கடிப்பதில்லை... கடிப்பதற்கு முன்னர்... சில அறிகுறிகளைக் காட்டும். அதைச் சரியாகப் புரிந்துகொண்டோமென்றால் தப்பிக்கொள்ளலாம். ஒரு வீட்டுக்குப் போகிறீர்கள். அங்கே புதிதாக ஒரு நாயைப் பார்க்கிறீர்கள். உடனே அதன் கிட்டப் போய் குனிந்து... சிரித்துக் கொண்டே அதன் தலையில் தட்டுகிறீர்கள்! இது ரொம்பத் தப்பு.

ஒரு நாய், இன்னொரு நாயை நேருக்கு நேர் பார்த்துப் பல்லைக் காட்டினால்... அது தன்னுடைய தன் முனைப்பைக் காட்டுகிறது என்று அர்த்தம்... உன்னைவிட நான் பெரியவன் என்று சொல்கிறது என்று அர்த்தம். அதனாலே நீங்களும் அது மாதிரிக் கிட்டப் போய் சிரிக்கிறோம் என்று நினைத்துக் கொண்டு பல்லைக் காட்டினால் உங்களையும் எதிரியாக நினைத்து விடும்!

இன்னொரு விஷயம்-தலையிலே தட்டினால் நாய்க்குப் பிடிக்காது. அது தன்னை அடக்கிறதாகவும், அச்சுறுத்துவதாகவும் நினைத்துக்கொள்ளும். அப்படியென்றால் புதுசா ஓர் இடத்திலே அல்லது ஒரு வீட்டிலே நாய்க்குட்டியைப் பார்த்தால் என்ன செய்வது...? நீங்கள் சும்மா இருங்கள்... அதுவாகக் கிட்டவரட்டும். அதற்கப்புறம் அதுகிட்ட கனிவாய் பேசுங்கள்... கன்னம், மார்பு, தோள் இங்கேயெல்லாம் தட்டலாம். தப்பு இல்லை. ஆனால் தலையிலே தான் தட்டக்கூடாது.

ஒரு நாய் உங்களை நோக்கி ஓடிவருகிறது... நீங்களும் ஓடினால் அது துரத்த ஆரம்பித்துவிடும். அசையாமல் சிலை மாதிரி நின்றுவிடுங்கள்..., அதுகிட்ட வராது. அதற்கு ஆர்வமில்லாமல் போய்விடும்.

ஒரு தெருவிலே சின்னப் பிள்ளைகள் நிறையப்பேர் விளையாடிக்கொண்டிருந்தார்கள்... அப்பொழுது சில நாய்கள் அங்கே ஓடிவந்தன. அதைக்கண்டு பிள்ளைகள் எல்லோரும் ஓட ஆரம்பித்தார்கள்... அப்படி ஓடும் பொழுது ஒரு பையன் கால் தடுக்கிக் கீழே விழுந்துவிட்டான்... என்ன நடந்தது தெரியுமா?

துரத்திக்கொண்டு வந்த நாய்கள் கீழே விழுந்தவனை ஒன்றுமே செய்யவில்லை... அவன் கிட்டவே போகவில்லை... ஓடிய பையன்களைத் துரத்திக் கொண்டு அவர்கள் பின்னாலேயே ஓடியனவாம்! இதுதான் நாய்களுடைய சுபாவம்.

ஒரு நாய் நம்மை நேருக்கு நேர் முறைச்சுப் பார்க்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்... நாங்களும் அதை முறைத்துப் பார்க்கக்கூடாது... வேறு பக்கம் பார்க்க ஆரம்பிக்க வேண்டும். ஒரு நாய் கோபமாக இருந்தால் அதனுடைய வால் உறுதியாக, நேராக நிற்கும். நாய் பணிந்து போனால் அல்லது பயந்து போனால் அது தன்னுடைய வாலை பின்னங் கால்களுக்கிடையில் வைத்துக்கொள்ளும்.

ஒரு நாய் பணிந்துபோனால் தன்னுடைய வாலை பின்னங் கால்களுக்கிடையில் வைத்துக் கொள்ளும். குட்டி நாய்களானால் மல்லாந்து படுத்து நாலு கால்களையும் மேலே தூக்கிக் கொள்ளும்!

ஒரு நாய் நம்மைப் பார்த்து பயந்துவிட்டதென்றால் அதனாலே நமக்கு ஆபத்து இல்லை என்று நினைத்துவிடக் கூடாது. உங்களைப் பார்த்து ஒரு நாய் ஒதுங்கினால் நீங்கள் விலகிப் போய்விட வேண்டுமென்று நினைக்கிறது என்று அர்த்தம்.

நிறையப் பேர் பயந்துபோன நாய்களினாலேயே கடிக்கப்படுகிறார்கள். ''இவன் நம்மைவிட பெரிய ஆள்... மாட்டிக்கிட்டோம்... வேறுவழியில்லை''என்ற நினைப்பிலே தான் கடிக்க ஆரம்பிக்கிறது... இதேமாதிரி சங்கிலியாலே கட்டிப் போட்டிருக்கிற நாயும் ஆபத்தானதுதான்... தொடர்ந்து கட்டிப்போட்டால் காலப் போக்கிலே அது ஒரு மாதிரி ஆகிவிடும்.

நாய் குழந்தைகளைக் கடிக்காது என்று சிலபேர் சொல்வார்களே அதுவும் தவறான நம்பிக்கை... அதனாலே சின்னக் குழந்தைகளை தனியாக நாயோடு விளையாடவிடக்கூடாது. ஒருவர் தன்னுடைய நண்பர் வீட்டுக்குப் போயிருந்தார். அவசியம் எங்கள் வீட்டிலே சாப்பிட்டுவிட்டுத்தான் போக வேண்டுமென்று நண்பர் அன்பாகக் கேட்டுக்கொண்டார். அதை மீற முடியாமல் அவரும் சாப்பிட உட்கார்ந்தார்.

சாப்பாடு போட்டார்கள். சாப்பிட ஆரம்பித்தார். அவர்கள் வீட்டிலே கட்டிக்கிடந்த நாய்க்குட்டி இவர் சாப்பிடுவதையே முறைத்துப் பார்த்தது... ஏன் இப்படி என்னை முறைக்கிறது உங்கள் நாய்க்குட்டி என்று நண்பரைக் கேட்டார். அதுகிட்ட ஒரு கெட்ட பழக்கம்... தன்னுடைய தட்டிலே யார் சாப்பிட்டாலும் இப்படித்தான் முறைக்கும் என்றார் நண்பர்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# கமநல சிறுவர் புலமைப் பரிசில் நிதியம்

கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் 50வது வருட சேவை நிறைவை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் வசதி குறைந்த விவசாயிகளின் பிள்ளைகளின் கல்வி மேம்பாடு அடையவும், அவர்களின் தொழில் அபிவிருத்தி அடைவதற்குமான திட்டங்கள் வரையப்பட்டு அதனை அபிவிருத்தி செய்யுமுகமாக கமலநல சிறுவர் புலமைப் பரிசில் நிதியம் ஒன்று கமநல அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர் நாயகம் டி.டி.வணிகநாயக்காவின் வழிகாட்டலின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் இந் நிதியத்தின் ஊடாக வசதி குறைந்த விவசாயிகளின் பிள்ளைகளின் வாழ்வு வளம் பெற இத் திட்டம் இரண்டு வழிகளில் செயற்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

1.கல்வி பொதுத் தராதர (சாதாரண) பரீட்சையில் சித்தி அடைந்து கல்வியை மேலே தொடர வசதி வாய்ப்புக் குன்றிய விவசாயிகளின் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் அவர்களின் உயர்தர கல்வியைத் தொடர்வதற்காக மாதம் ஒன்றிற்கு ரூபா 1000/- வீதம் 20 மாதங்களுக்கும் ரூபா 20,000/- வழங்குவதற்கும்,

2. உயர்தரக் கல்வியைத் தொடர்வதற்கு தகைமை அற்ற பிள்ளைகளுக்கு விவசாயக் கல்வியை அல்லது பயிற்சியை வழங்குவதற்கும் மாதம் 1000/- வீதம் 20 மாதங்களுக்கும் ரூபா 20,000 வழங்குவதற்கும் திட்டங்கள் வரையப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இந் நிதியத்திற்கு வேண்டிய நிதியை கமநல அபிவிருத்தி திணைக்கள பொன்விழாவை முன்னிட்டு அச்சிடப்பட்ட கொடிகள் விற்பனை மூலமும், கமக்கார அமைப்புகளின் பங்களிப்போடு சேர்க்கப்படும் நிதி மூலமும் கமநல சேவை குழு நிதி அன்பளிப்பு மூலமும் மற்றும் பொது ஸ்தாபனங்கள், அரசாங்க திணைக்களங்கள், வர்த்தக நிறுவனங்கள், நல் மனது படைத்த நலன்விரும்பிகள் மூலமும் பெற்று இந் நிதியத்தின் ஊடாக இப் பணியை நிறைவேற்ற யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

பிரதேச ரீதியாக சேர்க்கப்படும் நிதி அப் பிரதேசத்தில் வசதி குறைந்த விவசாயிகளின் பிள்ளைகளுக்கே பகிர்ந்து வழங்கப்படும் என்பதுடன் ஒரு வளமான எதிர்கால சந்ததியை உருவாக்க இச் செயற்பாடு உதவும் என்பதாலும் இதற்கான நிதி உதவிகளை வழங்குமாறு யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் கேட்டுக்கொள்கின்றார்.

மேலும் இந் நிதியத்திற்கு பங்களிப்புச் செய்ய விரும்புவோர் தங்களுக்கு அருகிலிருக்கும் கமநல சேவைகள் நிலையங்களில் நிதியைச் செலுத்தி இதற்கான பற்றுச்சீட்டைப்பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றார். (அ)

## புற்றுநோயாளர்களுக்கு போசாக்குணவு வழங்கல்

இன்று காலை 8.00 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையின் தாதிய பயிற்சிக் கல்லூரியில், புற்றுநோயாளர்களுக்கு கொழும்பு இராமகிருஷ்ண மிசனால் வழங்கப்பட்ட போஷாக்குணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு வைத்திய கலாநிதி ந.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

வறுமைக்கோட்டிற்குட்பட்ட புற்றுநோயாளர்கள் உரிய ஆவணங்களுடன் காலை 7.30 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சை பகுதிக்கு சமுமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.(அ)

## உபவேந்தர் ரவீந்திரநாத் கடத்தல் விவகாரம் நம்பிக்கையை இழந்த நிலையில் குடும்பத்தினர்

கடத்தப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத்தின் நிலைமை குறித்து எதுவும் தெரியாத நிலையில் அனைத்து நம்பிக்கையையும் இழந்துவிட்டதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

பல்வேறு முறைப்பாடுகள் செய்த போதும் உபவேந்தர் நிலை தெரியாமையால் அவர் ''இறந்துவிட்டதாக'' கருதி அதற்குரிய பூசைகள் செய்ய உள்ளோம் என்று அவரது குடும்பத்தைச் சேர்ந்த கலாநிதி மலரவன் தெரிவித்துள்ளார்.

''ஒருவர் இறந்த பின்னர் 90 அல்லது 180 நாளில் தான் இத்தகைய பூசைகள் நடத்துவோம்.தற்போது எதுவித தகவலும் தெரியாத நிலையில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி அதனை நடத்தஉள்ளோம்'' என்றும் அவர் கூறினார்.

இதனிடையே எதிர்வரும்16 ஆம் திகதி உபவேந்தராக கல்வியாளர்களால் அனைத்து மத பிரார்த்தனைக் கூட்டத்தை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

## இராசிபலன்

09.06.2007
வைகாசி 26 சனிக்கிழமை
நவமி முன்னிரவு 11.11வரை
புரட்டாதி மு.ப. 7.48 மணிவரை
இராகுகாலம் 8.52-10.22 மணிவரை
சுபநேரம் 2.52-4.22 மணிவரை

**மேடம்:-** காரிய அலைச்சல், சயனசுகக் குறைவு, பிறருக்கு உதவுதல், சுபசெலவு.

**இடபம்:-** போசன நன்மை, காரிய அனுகூலம், பெருமையடைதல், தனவருவாய்.

**மிதுனம்:-** நல்ல தகவல், அதிகாரம், செய்தொழில் விருத்தி, முயற்சி கைகூடும்.

**கடகம்:-** பித்த ரோகம், தொழில் சிந்தை, எடுத்த காரியம் தாமதமாகும், திடீர்நன்மை.

**சிங்கம்:-** நிலைமாற்றம், பிரயாண பயம், தொழில் மந்தநிலை, பணக்குறைவு.

**கன்னி:-** சௌக்கிய விருத்தி, களஸ்திர நன்மை, விருந்துபசாரம், முயற்சி கைகூடும்.

**துலாம்:-** மனமகிழ்ச்சி, பகைவர் நேசம்,தொழில் விருத்தி, உடல்நலம்.

**விருச்சிகம்:-** வியாபார நன்மை, சோகமான நிலை, சிறுவியாதி, பணக்குறைவு.

**தனுசு:-** பதட்டமான நிலை, முயற்சி தாமதமாகும், உறவினர் சந்திப்பு, திடீர்நன்மை.

**மகரம்:-** பிரயாணநன்மை, காரிய சித்தி, இனிய சம்பவம், போசன சுகம்.

**கும்பம்:-** வீண்விவாதம், கௌரவக்குறைவு, பணவிரயம், வேலைச்சுமை.

**மீனம்:-** உறவினர் சந்திப்பு, ஜனவசியம், பிரயாண நன்மை, தெய்வசிந்தை.

-வளவன்

## யோகாசனப் பயிற்சி வகுப்புக்கள்

தாவடி, கொக்குவில் ஸ்ரீஇராமகிருஷ்ண சமிதியில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு இலவச யோகாசனப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் காலை 6.30 மணி முதல் 8.00 மணிவரை நடைபெறும். இதில் சமிதி அறநெறிப் பாடசாலை மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆர்வமுடைய அனைவரும் கலந்துகொள்ளலாம். (அ)

## தமிழ்த்தினப் போட்டி

## தேசிய மட்டத்தில் பங்குபற்றும் மாணவர்களுக்கு படையினரால் இலவச பயண ஏற்பாடு

அகில இலங்கை தமிழ்த் தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் கலந்துகொள்ளும் யாழ். பிரதேச பாட சாலை மாணவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரையான போக்குவரத்தை இராணுவத் தினர் இலவசமாக ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாக பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்றுவதற்காக ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் உட்பட 45 பேர் பயணம் செய்ய இருந்ததுடன் அவர்கள் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி இருப்பதை உணர்ந்த யாழ்.பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறியின் ஆலோசனையின் பேரில் அவர்களுக்கு கிறின் ஓசன் கப்பலில் பயணிப்பதற்கான அனுமதிப்பத்திரம் இலவசமாக வழங்கப்பட்டு கடந்த 4 ஆம் திகதி காங்கேசன்துறையில் இருந்து வழி அனுப்பிவைக்கப் பட்டனர்.

இந் நிகழ்வின் போது பாதுகாப்புப் படைகளின் தளபதிக்கு பதிலாக யாழ். பிரதான சிவில் இணைப்பதிகாரி கலந்து கொண்டு பயணத்திற்கான இலவச பயணச் சீட்டுகளை வழங்கினார். திருகோணமலைக்கு கப்பலில் செல்லும் இவர்களுக்கு திருமலையில் இருந்து கொழும்பு வரை பயணிப்பதற்கு இலவச பயண ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் போட்டி முடிவுகளின் பின்னர் கொழும்பில் இருந்து மீண்டும் அழைத்துவர இராணுவத்தினரால் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் யாழ்.மாணவர்களுக்கு தேவையான சிங்கள அரிச்சுவடிப் புத்தகங்கள் ஒரு தொகுதி யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு கையளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## மொழி பெயர்ப்பாளர் நியமனம்

(கொழும்பு)

அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்ற ஆசிரியர்களை பொலிஸ் திணைக்களத்தில் மொழி பெயர்ப்பாளராக நியமிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் மொழியில் எழுத வாசிக்கவும், உரையாடவும் சிங்கள மொழி தொடர்பான அறிவும் கொண்ட அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்ற ஆசிரியர்களை பொலிஸ் திணைக்களத்தில் மொழி பெயர்ப்பாளராக நியமனம் செய்வதற்கு பொலிஸ் மா அதிபர் விக்ரப் பெரேரா தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3)

## நூல் அன்பளிப்பு

இந்திய உயர்ஸ்தானிகர் அலோக் பிரசாத், யாழ்.பொது நூலகத்துக்கு மானிடவியல், சமூகவியல், பொருளாதாரம் மற்றும் கலை கலாசாரம் சம்பந்தமான ரூபா 8 இலட்சம் பெறுமதியான நூல்களையும் யாழ்.மருத்துவ பீடத்துக்கு ரூபா ஒரு இலட்சத்து 27ஆயிரம் பெறுமதியான மருத்துவ நூல்களையும் வழங்கவுள்ளார்.

இந்நூல் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 14ஆம் திகதி பி.ப.4 மணிக்கு பௌத்தலோக மாவத்தையில் உள்ள இந்திய கலாசார நிலையத்தில் நடைபெறவுள்ளது. (அ)

பாராளுமன்ற தேர்தலுக்கு மிக பொருத்தமான தொகுதிவாரி மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின் கலப்பான ஒரு கலப்பு முறைமையை கொண்ட தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் இடைக்கால அறிக்கை குழுவின் தலைவரும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தனவினால் பாராளுமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையின் தொகுப்பு.

♦ தேர்தல் முறைமை

நாட்டின் பாராளுமன்றத் தேர்தலுக்கு

# ‘தேர்தல் சீர்திருத்தங்கள்’

மிகப் பொருத்தமான தேர்தல் முறைமையாக தொகுதிவாரி மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின் கலப்பான ஒரு கலப்பு முறைமை

♦ உறுதியான ஒரு அரசாங்கம் மற்றும் உறுதியான எதிர்க்கட்சி ஸ்தாபிக்கப்படுதல், சிறுபான்மைக் கட்சிகளுக்கும் சமுதாயங்களுக்கும் சமத்துவமான பிரதிநிதித்துவம் வாக்காளர்களுக்கும் அவர்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்குமிடையில் நெருக்கமான தொடர்பு மற்றும் மக்கள் ஆணையின் ஜனநாயக பிரதிநிதித்துவம் ஆகியவற்றை இறுதியான பிரேரணைகள் உறுதிப்படுத்தல் வேண்டும்.

♦ விருப்புமுறையை ஒழித்தல் அல்லது குறைத்தல் தேர்தல்களில் மிகையான செலவு, தேர்தல் காலங்களில் அரச வளங்களின் துஷ்பிரயோகம் ஆகிய விடயங்களுக்கு உத்தேச தேர்தல்கள் முறைமையில் அழுத்தம் கொடுக்கப்படல் வேண்டும்.

♦ முன்மொழியப்படுகின்ற முறைமை புரிந்துகொள்ள இலகுவானதாகவும் நிர்வகிக்கக்கூடிய அளவு இலகுவானதாகவும் இருக்க வேண்டும். விருப்புத்தெரிவு வாக்கு முறைமையானது முறைமையில் இருந்து அகற்றப்படல் வேண்டும்.

பாராளுமன்றத் தேர்தல்கள்

பாராளுமன்றமானது 225 உறுப்பினர்களை கொண்டிருக்க வேண்டும்.

♦ 140 தொகுதிவாரி முறைமையின் அடிப்படையில் 140 வாக்கெடுப்புப் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்படுபவர் (ஒரு தெரிவுசெய்யப்பட்ட தொகுதிவாரியான பாராளுமன்ற உறுப்பினர்கள்)

♦ 70 மாவட்ட விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையில் தெரிவுசெய்யப்படுபவர் (மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள்)

♦ 15 தேசிய பட்டியல் (தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்கள்)

140 தொகுதிவாரி பாராளுமன்ற உறுப்பினர்கள்

தொகுதிவாரி பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் 140 பாராளுமன்ற உறுப்பினர்களைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பும் வகையில் 140 தனி உறுப்பினர்கள் தொகுதிகளாகப் பிரிக்கப்படும். முன்மொழியப்பட்ட முறைமைக்கு ஏற்ப 140 வாக்கெடுப்பு பிரிவுகளின் எல்லைகளை மீள் நிர்ணயிப்பதற்காக புதிய மீள் நிர்ணயம் அவசியமானதாகும்.

70 மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள்

தொகுதிவாரி பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் தோல்வியடையும் வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு மாவட்ட விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் 70 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர்.

தேர்தலில் போட்டியிட்ட தொகுதி வாரி தேர்தல் முறைமையின் கீழ் தெரிவு செய்யப்படுவதற்கு தகுதிபெறாத ஏனைய வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளை மாத்திரம் அடிப்படையாகக்கொண்டு 70 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். மாவட்ட விகிதாசார பிரதிநிதித்துவ (மா.வி.பி.) ஆசனங்கள் பின்வருமாறு ஒதுக்கப்படும்.

அ. ஒவ்வொரு மாவட்டத்திலும் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் அம் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு தொகுதிக்குமான குறிப்பிட்ட அரசியல் கட்சியில் வெற்றிபெறும் வேட்பாளர்களினால் பெறப்பட்ட வாக்குகள் (தொகுதிவாரி அடிப்படையின் கீழ் ஆசனங்களை ஒதுக்குவதற்கு

ஆ. 'தகுதிபெறும் எண்ணிக்கை'யை நிர்ணயிக்கும் பொருட்டு மாவட்டத்தின் எல்லை தொகுதிகளின் உள்ள ஏனைய வேட்பாளர்களின் பெற்ற வாக்குகள் ஒன்றாக கூட்டப்பட்டு அந்த மாவட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட மொத்த மா.வி.பி. ஆசனங்களின் எண்ணிக்கையினால் பிரிக்கப்படும்.

இ. மா.வி.பி. முறைமையின் கீழ் கட்சிக் குறித்தான ஆசன எண்ணிக்கையானது மாவட்டத்திற்கென ஒவ்வொரு கட்சியும் 'ஏனைய வேட்பாளர்கள்' மூலமாக பெற்ற மொத்த வாக்குகளின் எண்ணிக்கையை அக்குறிப்பிட்ட மொத்த வாக்குகளை தகுதி பெறும் எண்ணினால் வகுக்கப்படுவதன் மூலம் நிர்ணயிக்கப்படும்.

ஈ. ஒரு மாவட்டத்தினுள் ஒரு கட்சியில் இருந்து தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் ஒவ்வொரு தொகுதியிலிருந்து மிக உயர்ந்த வீதத்திலான வாக்குகளை பெறும் வேட்பாளரே மா.வி.பி.முறைமையின் கீழ் தெரிவுசெய்யப்படுவார்.

ஒவ்வொரு குறிப்பிட்ட மாவட்டத்திற்கும் என ஒதுக்கப்படும் மாவட்ட விகிதாசார பிரதிநிதித்துவ ஆசனங்களின் எண்ணிக்கை 2:1 எனும் விகிதத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படலாம். (உதாரணமாக 10 தொகுதிவாரி ஆசனங்கள் 5 மாவட்ட விகிதாசார பிரதிநிதித்துவ ஆசனங்கள்) எனினும் இந்த விகிதமானது ஒவ்வொரு மாவட்டத்தினதும் சூழ்நிலைக்கு அமைய மாறுபடலாம். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தெரிவுசெய்யப் படவேண்டிய மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை தீர்மானிக்கும் பொழுது அம்மாவட்டங்களின் பரப்பளவு, சனத்தொகை மற்றும் வாக்காளர்களின் இனத்துவ பல்வகைத்தன்மை ஆகியன கருத்தில் கொள்ளப்படலாம்.

தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேசிய பட்டியல் ஒன்றை ஆக்குவதற்காக நியமனபத்திரங்களை தாக்கல் செய்யும் போது வேட்பாளர்கள் பட்டியல் ஒன்றைசமர்ப்பிக்குமாறு ஒவ்வொரு கட்சியிடமும் கேட்டுக் கொள்ளப்படும். இப்பட்டியலானது (தேர்தல் தொகுதிக்காக) போட்டியிடுகின்ற அல்லது போட்டியிடாத வேட்பாளர்களின் பெயர்களை கொண்டிருக்கலாம். தேசியப் பட்டியலில் பெண் வேட்பாளர்களின் நியாய பூர்வமானபிரதிநிதித்துவம் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அனைத்துக் கட்சிகளும் எடுக்க வேண்டும்.

அ. தேர்தலின் அதிகூடிய எண்ணிக்கையான செல்லுபடியான வாக்குகளை பெறும் கட்சிக்குத் தேசியப் பட்டியலில் இருந்து ஐந்து ஆசனங்கள் ஒதுக்கப்படும். (போனஸ் ஆசனங்கள்)

ஆ. எஞ்சியுள்ள 10 ஆசனங்களில் 3 ஆசனங்கள் தேசிய மட்டத்தில் இயல்பான வெட்டுப்புள்ளியை விட கூடியளவு வாக்குகளைப் பெற்றிருந்தும் தொகுதிவாரி முறைமையின் கீழ் அல்லது மாவட்ட விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் ஆசனம் ஒன்றை பெற தகுதிபெறாத, பிரதிநிதித்துவம் செய்யப்படாத சிறுபான்மை கட்சிக்கென ஒதுக்கவேண்டும். இவ்வாசனங்களுக்கு எக்கட்சியும் தகுதி பெறாத விடத்து, அவை தேசிய பட்டியல் ஆசனங்களாக எஞ்சியிருக்கும்.

இ.எஞ்சியிருக்கும் ஆசனங்களின் எண்ணிக்கையானது,தேசிய மட்டத்தில் ஒவ்வொரு கட்சியும் பெறும் வாக்குப் பலத்தை அடிப்படையாகக் கொண்டு கட்சிகளிடையே ஒதுக்கீடு செய்யப்படும். விகிதாசார ஒதுக்கீட்டு அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டிய வேட்பாளர்கள் கட்சியின் செயலாளரால் தீர்மானிக்கப்படுவார். கட்சியின் செயலாளரினால் தேசியப் பட்டியலுக்கு பெயர் குறிப்பிடப்படும் வேட்பாளர்களுக்கு மூன்றுக்கு ஒரு வேட்பாளர் பெண் வேட்பாளராக இருப்பதை கட்டாயப்படுத்தும் வகையில் சட்டத்தில் ஏற்பாடு செய்வது அவசியமானதாகும்.

வெற்றிடங்களை நிரப்புதல்

பிராந்திய தேர்தல் தொகுதிகளில் வெற்றிடம்ஒன்றுஏற்படும்போது, அந்தவெற்றிடமானது ஓர் இடைத் தேர்தலை நடத்துவதன் மூலமாக நிரப்பப்படல் வேண்டும். இருப்பினும் இத்தகைய இடைத்தேர்தலின் முடிவுகள் அந்த மாவட்டத்தின் விகிதாசார பிரதிநிதித்துவ ஆசனங்களை பாதிக்காதவகையில் இருக்க வேண்டும்.

மாவட்ட விகிதாசார தேர்தல் முறையின் கீழ் ஏற்படும் எந்த வெற்றிடமும் குறித்த தொகுதியினுள் சம்பந்தப்பட்ட அரசியல் கட்சியில் அதற்கு அடுத்து உயர்ந்த வீதவாக்குகளை பெற்றுக்கொண்டவரை தெரிவு செய்வதன் மூலம் நிரப்பப்படும். தேசிய பட்டியல் ஒதுக்கீட்டில் ஏற்படும் ஒரு வெற்றிடமானது குறித்த கட்சியின் செயலாளரால் பெயரிடப்படும் பட்டியலில் உள்ள மற்றுமொரு வேட்பாளரால் நிரப்பப்படலாம்.

இந்த முறையை பிரயோகிப்பதன் மூலமாக சிறுபான்மைக் கட்சிகளினதும் சமூகங்களினதும் நியாயமான பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் அதேவேளை, பாராளுமன்றத்தின் ஸ்திரத்தன்மையும் நிர்வகிக்கக் கூடிய தன்மையையும் வழங்கும் இலக்குகளை பூர்த்தி செய்கின்றது.

ஆ. மாகாணசபைத் தேர்தல்கள்

உத்தேச பாராளுமன்றமுறையை ஒத்திருக்கும் தொகுதி வாரித் தேர்தல்முறை மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவமுறை என்பவற்றை 2:1 என்ற விகிதத்தில் கொண்ட கலப்பு முறை ஒன்றால் பதிலீடு செய்யப்பட வேண்டும் என்ற கருத்தை கொண்டுள்ளது.

இ. உள்ளூராட்சித் தேர்தல்கள்

உள்ளூராட்சித் தேர்தல்களின் 'வட்டார முறைமை' மீளவும் அறிமுகப்படுத்தப்படும். சமூகத்தினதும் சமூக அமைப்பினதும் பங்கேற்பை அதிகரித்தல் பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் பொருளாதார தேவைகள் என்பவற்றின் முகாமைத்துவம் பல்வகை முகாமைத்துவம் என்பவற்றை இலகுபடுத்தல் மற்றும் சிறுபான்மையின சமூகங்களின் ஜனநாயக பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படும்.

தற்போது இருப்பதனைவிட பிரதேச அளவிலும் சனத்தொகை ரீதியிலும் சிறியதான உள்ளூராட்சி அலகொன்றை அமைக்கும் முகமாக உள்ளூராட்சி அதிகார சபைகளின் தற்போதைய எல்லைகள் மீள் நிர்ணயம் செய்யப்படும். பிரதேச செயலக பிரிவொன்றினுள் வரும் உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவேண்டும். உள்ளூராட்சி தேர்தல் ஒன்றிற்கு பின்னர் உள்ளூராட்சி சபைகளின் தவிசாளரும் பிரதி தவிசாளரும் உள்ளூராட்சி சபைகளிலேயே தெரிவு செய்யப் படுவர்.

சிறுபான்மை சமூகங்களின் அல்லது பிரதிநிதித்துவப்படுத்தாத கட்சிகளின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதன் பொருட்டு பாராளுமன்ற மாகாணசபை தேர்தலுக்கான அதே விகிதாசார முறையின் கீழ் 30 சதவீதமான பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுவர்.

ஈ. எல்லை நிர்ணய ஆணைக்குழு

எல்லை நிர்ணய ஆணைக்குழுவானது சதா காலமும் நிலைத்திருக்கும் ஒரு ஆணைக்குழுவாக இருக்கவேண்டும். எல்லை நிர்ணய ஆணைக்குழுவை மீள அமைப்பதற்காக அரசியலமைப் பின் 95 தொடக்கம்99 வரையிலான உறுப்புரைகளை உரிய முறையில் திருத்துவதற்கு நடவடிக்கை எடு • கப்பட்டுள்ளது. சிறுபான்மை இனத்தவர்களின் கருத்துக்களை எல்லை நிர்ணய ஆணைக்குழு கவனத்தில் எடுக்கும்.

## பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முன்மொழிவுகள்

உ. அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம்

பாராளுமன்றம், மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகளில் பெண் உறுப்பினர்களின் பிரதிநிதித்துவத்தை உத்தரவாதப் படுத்தும் பொருட்டு பெண்வேட்பாளர்களின் நியமனத்தை அரசியல் கட்சிகள் தமது கொள்கைகளில் உள்ளடக்க வேண்டும். தேர்தலில் தேசியப்பட்டியலில் பெயர் குறிப்பிடப்படும் வேட்பாளருள் மூன்று பேருக்கு ஒருவர் பெண் வேட்பாளராக இருப்பதனை உறுதிசெய்யவேண்டும்.

ஊ. இலத்திரனியல் வாக்களிப்பு

இலத்திரனியல் வாக்களிப்பு முறையை அறிமுகம் செய்வதன் மூலம் செலவீனத்தையும், தாமதத்தையும் பெருமளவு குறைக்கலாம்.

எ. தபால் மூல வாக்களிப்பு முன்கூட்டிய வாக்களிப்பாக மாற்றப்படுதல்

தற்போதைய தபால்மூல வாக்களிப்பு முறைமை பல குறைபாடுகளைக் கொண்டிருப்பதால் முன்கூட்டிய வாக்களிப்பு முறை ஒன்றை அறிமுகம் செய்வதன் மூலம் அக் குறைபாடுகளை நிவர்த்திக்க முடியும் தற்போது தபால் மூலம் வாக்களிப்புக்குத் தகுதியுடைய வாக்காளர்கள் முன்கூட்டிய வாக்காளர்களாகக் கருதப்பட்டு, அவர்களுக்கு தேர்தல் தினத்திற்கு மிக முன்னதாக தேர்தல்கள் ஆணையாளரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளால் /தெரிவு அத்தாட்சி அலுவலர்களால் விசேடமாக அமைக்கப்பட்டு முகாமைத்துவம் செய்யப்படும் நிலையங்களில் போட்டி யிடும் அரசியல் கட்சிகள் சுயாதீனக் குழுக்கள் என்பவற்றின் முகவர்கள் முன்னிலையில், வாக்களிக்க வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

முன்கூட்டிய வாக்களிப்பு த்தினமானது தேர்தல் தினத்திற்கு 14 நாட்களுக்கு மேற்படாததாகவும் 5 நாட்களுக்கு குறையாததாகவும் அமையவேண்டும். வாக்குப் பதிவு முடிந்ததும் வாக்குப் பெட்டிகள் பாதுகாப்பான ஒரு மத்திய இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தேர்தல் முடிந்து வாக்கு எண்ணுதல் தொடங்கும் வரைக்கும் பாதுகாப்பாக வைக்கப்படல் வேண் டும்.

வாக்காளர்களைஅச்சுறுத்தல், அவர்கள் மீது செல்வாக்கினைப் பிரயோகித்தல் பிழையான தகவல்களுடன் தபால் மூல வாக் கெடுப்பிற்கு விண்ணப்பிப்பதற்கான வாய்ப்புகளை இல்லாதொழித்தல் அடங்கலாக தற்போதைய தபால் மூல வாக்கெடுப்பு முறையில் காணப்படுகின்ற பல்வேறு குறைபாடுகளை இம் முறை மூலமாக இல்லா தொழிக்க முடியும்.

ஏ. அரசியல்கட்சிகளை அங்கீகரித்தல்

அரசியல் கட்சிகளை அங்கீகரிப்பதானது, அக் கட்சிகளுக்கான வாக்காளர் அங்கீகாரத்தை அடிப்படையாகக் கொண்டமைவதைவிட, சட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதையே அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. அரசியல் கட்சிகளை அங்கீகரிப்பது தொடர்பாக 1988 ஆம் ஆண்டின் 29ஆம் திகதி இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 7, 8 மற்றும் 9 ஆம் பிரிவுகளின் கீழுள்ள ஏற்பாடுகள் போது மானவையல்ல.

ஐ. சட்ட மறுசீரமைப்பு

சுதந்திரமும் நியாயபூர்வமான தேர்தல் கள் நடத்துவதற்கேதுவாக தேர்தல்கள் தொடர்பான புதிய சட்டங்களை வகுக்கவும் தேவையான மாற்றங்கள் கொண்டு வரப் படும்.

இதன் பிரகாரம் ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளின் கூட்டுக் கடிதத்தை பரிசீலித்து, குழுவின் பிரேரணையை நடைமுறைப்படுத்து வதற்குத் தேவையான திருத்தங்கள் தேர்தல் சட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான அவசர நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கின்றன. தேர்தல்கள் தொடர்பாக தற்போதுள்ள சட்ட அமைப்பிற்கான உத்தேச திருத்தங்கள்

அ. வாக்காளர் பதிவு

தகைமையுள்ள எல்லா வாக்காளர் களும் தேர்தல் தினத்திற்கு மிக அண்மித்த ஒரு திகதிவரை தம்மை பதிவு செய்வதற்காக வாக்காளர் இடாப்பினை தொடர்ச்சியாக புதிப்பிப்பதற்கான சட்டங்களை கொண்டு வருதல்.

ஆ. இரத்துச் செய்யப்படும் சந்தர்ப்பங்களில் மீள் வாக்களிப்பை கட்டாயமாக்குதல்

தேர்தல் இரத்துச் செய்யப்படும் சந்தர்ப்பங்களில் மறுவாக்கெடுப்புக்கு உட்படுத்துவதற்கான தீர்மானத்தை எடுப்பதற்காக அரசியல் கட்சிகளுடன் கலந்தாலோசிக்கும் தேவையை நீக்கி மீள் வாக்களிப்பு கட்டாயமாக்கப்படல் வேண்டும்.

இ.தேர்தல் திகதி

மக்கள் கருத்து வாக்கெடுப்புகள் பாராளுமன்ற, ஜனாதிபதி தேர்தலுக்குமான திகதியை நிர்ணயித்தலை ஜனாதிபதி அல்லது தேர்தல் ஆணையாளரிடம் வழங்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படல் வேண்டும். நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டு முடிந்ததன் பின்னர் ஆறு வாரங்களின் பின்னர் ஒரு சனிக்கிழமை வாக்களிப்பு நடத்துவதற்கு முன்மொழியப்படும். தேர்தல் களுக்காக செலவிடப்படும் மனித மணித்தியாலங்கள் தேர்தல்களில் ஈடுபடும் அலுவலர்களுக்கு வசதியாக இருக்கும். வேட்பாளர்களின் தேர்தல் செலவுகளை குறைப்பதற்கும் பிரசார காலத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணும் நிர்வாகச் செலவைக் குறைப்பதற்கான நடைமுறையாகும். அத்துடன் பிரசாரக் காலம் 5 ஆம் வாரத் திற்கு அப்பால் நீடிக்கக்கூடாது.

ஈ.பொலிஸ் இசைவு சான்றிதழ்

நியமனப் பத்திரங்களை கையளிக்கும் போது குற்றவியல் சாற்றுதல்களுக்கு எதிராக பொலிஸ் இசைவு சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும்.

*உ. சொத்துக்கள் பொறுப்புகள் பிரகடனம் நியமனம்*

பத்திரம் சமர்ப்பிக்கும் போது சொத்துக் கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய கூற்றை சமர்ப்பித்தல் கட்டாயமாக்கப்படல் வேண் டும்.

ஊ. ஒழுக்கக்கோவை

தேர்தலின் போது வேட்பாளர்கள், கட்சித் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு ஒழுக்க கோவையை பின்பற்றுமாறு சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண் டும்.

எ. அற்பமானதும் போலியானதுமான வேட்பைத் தடுத்தல்

தேர்தல்களில் போலியான வேட்பாளர் களை தடுத்து நிறுத்துவதற்காக வேட்பாளரது வேட்பு மனு சம்பந்தப்பட்ட தேர்தல் தொகுதியை சேர்ந்த முன்மொழிபவர் அல்லது வழிமொழிபவரால் (பதிவு செய்யப்பட்ட தேருனரால்) கையொப்பம் இடப்படவேண்டும். அத்துடன் ஒவ்வொரு வேட்பாளரினதும் வேட்பு மனுவில் அவரது தேசிய அடையாள அட்டை இலக்கம் பதியப்படல் வேண்டும்.

ஐ. தேர்தல் மனுக்கள்

தேர்தலுக்கான உகந்த சூழல் தேர்தல் கடமைகளை நிறைவேற்றுகையில் பொலிஸார் செயலற்ற அமைதியான பார்வையாளர்களாக இராமல் இருக்கத்தக்க வகையில் பொலிஸ் ஆணைக்குழுவினால் தெளிவாக விளக்கிக் கூறப்பட வேண்டும்.

தேர்தல் இடையூறுகள் வாக்களிப்பு நிலையங்களில் ஏற்படும் இடையூறுகள் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் திருத்தப்படல் வேண்டும் என்பதோடு உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் சட்டத்திலும் அறிமுகப்படுத் தப்படல் வேண்டும். வெற்றிடங்களை நிரப்புதல் (பாராளு மன்றம், மாகாணசபைகள், உள்ளூராட்சி சபைகள்)

தனி மனிதருக்கு ஒரு நியாயம் என்ற பிரிவு இருக்கும் வரையில் காட்டில் வாழும் விலங்கின் நிலையிலிருந்து இன்னும் மனிதன் முன்னேற வில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

—பெர்னார்ட்ஷா

வலம்புரி

## ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சியில் அரங்கேறிய அநாகரிகச் செயல்

கொழும்பிலுள்ள விடுதிகளில் பல்வேறு தேவைகளின் பொருட்டு தங்கியிருந்த வடக்குக் கிழக்குத் தமிழர்கள் வலுக்கட்டாயமாக பஸ்களில் ஏற்றப்பட்டு வடக்குக் கிழக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அரசின் இந்த அநாகரிகச் செயல் நேற்று முன்தினம் அதிகாலை வேளையில் அரங்கேறியுள்ளது. கொழும்பில் தமிழ் மக்கள் தங்கியிருந்த விடுதிகளை சுற்றிவளைத்த பொலிஸார் அதிகாலை வேளையில் அங்கிருந்த தமிழர்களை உடுத்த உடையுடன் பஸ் வண்டிகளில் ஏற்றினர்.

குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என்ற வேறுபாடுகளின்றி காலைக் கடன் கழிப்பதற்குக் கூட கால அவகாசம் வழங்காமல் நடந்த இந்தச் சம்பவம் இலங்கையின் வரலாற்றின் இருண்ட நிகழ்வாகும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவின் பேரிலேயே விடுதிகளில் உள்ள தமிழர்களை வெளியேற்றுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒரு நாட்டின் நிறைவேற்று அதிகாரத்திலுள்ள ஒருவர் இத்துணைதூரம் இனத்துவேஷம் கொண்டிருப்பது நாட்டின் எதிர்கால ஒற்றுமைக்கும், அமைதிக்கும் உகந்ததல்ல.

தலைநகரின் பாதுகாப்பை முன்வைத்து விடுதிகளில் தங்கியுள்ள 'தமிழர்களை வெளியேற்றுவதாக அரசினால் முன்வைக்கப்படும் கருத்தியல் எவ்வகையிலும் நியாயமும் ஏற்புடையதுமல்ல.

தலைநகரின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் பொறுப்பு படையினருடையது.

அதற்காக தலைநகரில் தமது பல்வேறு தேவைகளை நிறைவு செய்வதற்காக சென்ற தமிழர்களை எதுவித விளக்கம் விசாரணையின்றி அதிகாலை வேளையில் வலுக்கட்டாயமாக பஸ்களில் ஏற்றி வெளியேற்றிய செயல் ஆட்சிக்குரிய தகைமையை கொண்டிராதோரின் செயலாகவே கருதப்படும்.

தலைநகரில் விடுதிகளில் தங்கியுள்ளவர்களில் தமது அடையாளத்தை உறுதிசெய்ய தவறியவர்களை வெளியேற்றியதாக பாராளுமன்றத்தில் அமைச்சர் ராஜித சேனாரத்தின கூறியுள்ளார்.

அமைச்சர் ராஜித சேனாரத்தின மீது தமிழ் மக்களுக்கு நல்லதோர் அபிப்பிராயம் இருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியில் அவர் அமைச்சராக இருந்தபோது தென்மராட்சிக்கு விஜயம் செய்திருந்தார். தென்மராட்சி மீது படையினர் மேற்கொண்ட தாக்குதல்களால் ஏற்பட்ட அழிவைப் பார்த்த அவர் வியட்நாம் போரில் ஏற்பட்ட அழிவுகளைப் போல இருப்பதாக வர்ணித்திருந்தார்.

சிங்கள அமைச்சர் ஒருவர் அரச படைகளினால் ஏற்பட்ட அழிவுகளை வியட்நாம் போருக்கு ஒப்பிட்டிருந்தமையால், நேர்மையான அமைச்சர்களும் இருக்கின்றார்கள் என்ற எண்ணம் தமிழ் மக்களிடையே ஏற்பட்டிருந்தது.

ஆனால் கொழும்பிலுள்ள விடுதிகளிலிருந்து தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டதை அமைச்சர் ராஜித சேனரட்ணநியாயப்படுத்தமுற்பட்டதிலிருந்து ராஜிதவும் ஒரே குட்டையில் ஊறியவர் தான் என்ற முடிபுக்கு தமிழ் மக்கள் வந்து விட்டனர்.

எதுவாயினும் இனத்துவத்தின் அடிப்படையில் தமிழ்மக்களை அதிகாலை வேளையில் உடுத்த உடையுடன் வெளியேற்றியமை அரசின் புத்திசாலித்தனமற்ற முடிபாகும்.

இத்தகைய முடிபுகள் அரசின் இனவாதத்தை உலகம் உணர்ந்கொள்வதற்கான மற்றுமோர் சந்தர்ப்பமாகும்.

# கொழும்பிலிருந்து தமிழரை வெளியேற்றியது இலங்கை அரசின் மடத்தனமான செயல்

## தமிழக பத்தி எழுத்தாளர் எம்.ஆர்.நாராயணசுவாமி விபரிப்பு

தலைநகர் கொழும்பிலிருந்து பலவந்தமாக தமிழர்கள் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து தாங்கள் இலங்கையின் குடி மக்களா? அல்லது தமிழீழக் குடிமக்களா? என்ற கேள்வி தமிழர்கள் மத்தில் எழுந்துள்ளதாக இந்திய பத்தி எழுத்தாளர் எம்.ஆர்.நாராயணசுவாமி சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் எழுதிய செய்திக்கட்டுரையின் தமிழ் வடிவம் வருமாறு, எந்தவொரு நாட்டிலும் எந்த ஒரு அரசாங்கமும் தவறு செய்யலாம். ஆனால் சில தவறுகள் அரசியல் மடத்தனமாகிவிடும். இலங்கையின் தலைநகர் கொழும்பில் பெரும் எண்ணிக்கையிலான விடுதிகளில் இருந்து தமிழர்களை வெளியே துரத்தியமையும் இந்த வகையில்தான் அடங்கும்.

இலங்கையின் ஆளும் வர்க்கமானது நீண்டகாலமாக தமிழர் தாயகம் என்னும் கோட்பாட்டை நிராகரித்து வந்தது. ஏனெனில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே யுத்தம் இல்லாத பிரதேசங்களில் தமிழர்கள் வாழ்வதாகவும் அவர்கள் மகிழ்ச்சியுடன் இருப்பதாகவும் அரசாங்கமும் தலைவர்களும் கூறிவந்தனர்.

ஆனால் கடந்த வியாழக்கிழமை பொலிஸார் மேற்கொண்ட உச்சக்கட்ட நடவடிக்கையானது தமிழர் தாயகம் நடைமுறையில் உள்ளது என்பதை நிரூபித்திருக்கிறது. தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதேசம் என்பதை பிரித்தும் காட்டியிருக்கிறது.

கொழும்பில் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் வசிக்கும் பிரதேசங்களில் உள்ள சிறிய விடுதிகளில் தங்கியிருந்த 500 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் தங்கள் பொதிகளுடன் வவுனியாவிற்கும் மட்டக்களப்பிற்கும் பேருந்துகள் மூலம் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

இலங்கைத் தீவில் வடக்குக் கிழக்கில் தமிழர் தாயகம் எனப்படும் பிரதேசத்தில் முக்கியமான இரு நகரங்கள் வவுனியாவும் மட்டக்களப்பும். இலங்கையில் சிங்கள மற்றும் தமிழர் தேசங்கள் உள்ளன என்றும் அந்த இரு தேசங்களும் இணைந்து செயற்பட முடியாது என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்து வரும் வாதத்தை நிரூபிப்பது போல் கொழும்பின் ஒரே ஒரு நடவடிக்கை அமைந்து விட்டது.

இத்தகைய பாரிய வெளியேற்ற நடவடிக்கைக்கு இலங்கையிலும் அதற்கு வெளியேயும் பாரிய கண்டனத்தை ஏற்படுத்தியிருப்பது ஆச்சரியமானது அல்ல. இலங்கைத் தலைமை நீதிமன்றமும் வெளியேற்ற நடவடிக்கைக்கு தடைவிதித்துள்ளது. வெளியேற்றப்பட்ட தமிழர்கள் விடுதலைப்புலிகளின் முகவர்கள் அல்லது சக்தி வாய்ந்த தற்கொலைதாரிகள் என்று பொலிஸார் வாதிடலாம். அது உண்மையாகவும் இருக்கலாம்.

ஆனால் பதுங்கியிருக்கும் விடுதலைப்புலி முகவர்கள் கொழும்பில் வழமையான பிற பகுதிகளில் ஏன் வசிக்கக் கூடாது? ஆக கொழும்பில் இருந்து தமிழர்களை வெளியேற்றினால் அது பயங்கரவாதத்திற்கு எதிரான ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையா?

1980 களில் யாழ்ப்பாணத்தில் தமிழர் ஆயுதப்போராட்டம் வேர்விட்ட காலத்தில் சைக்கிளில் தமிழ்க் கெரிலாக்கள் தாக்குதலை நடத்துகின்றனர் என்று கூறி சைக்கிளை தடைசெய்தனர். அப்படியானால் போராளிகள் முச்சக்கர வாகனங்களை பயன்படுத்தினால் அதுவும் தடைசெய்யப்பட்டுவிடுமா? என்ற கேள்வி எழுப்பப்பட்டது.

கணவன் அல்லது மனைவியை ஏமாற்றுகிறார்கள் என்பதற்காக உடலுறவை தடைசெய்வார்களா? கொழும்பில் நீண்டகாலம் அல்லது குறுகிய காலம் தங்கியிருந்த போது தமிழ் மற்றும் சிங்களவரிடையே ஆழமான பிளவு இருப்பதை அறிய முடிந்தது. கொழும்பு நகரில் பல முறை முச்சக்கர வாகனங்களில் சென்றிருக்கின்றேன். பொலிஸார் அல்லது இராணுவச் சோதனைசாவடி அருகே தமிழ் வானொலி ஒலிபரப்புக்களை தமிழ்ச்சாரதிகள் நிறுத்திவிடுவதை அவதானித்திருக்கின்றேன்.

'அவர்கள் உங்களை யார் என்று கேட்டால் தமிழர் என்று சொல்லவேண்டாம் இந்தியன் என்றும் டில்லியில் இருந்து வந்திருப்பதாகவும் கூறுங்கள்' எனத் தெரிவிப்பர். மிகவும் கட்டுக்கோப்பான நவீனமான எதிரியுடனான இலங்கை யுத்தம் மிகக்கடினமானது என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் கொழும்பு விடுதிகளில் இருந்து தமிழர்கள் துரத்தப்பட்டமையானது-எண்ணிக்கை 500ஆக இருக்கலாம்-விடுதலைப்புலிகளின் தத்துவதை நிரூபிப்பதாகவுள்ளது. கொழும்பில் இருந்து பலவந்தமாக தமிழர்கள் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து தாங்கள் இலங்கையின் குடி மக்களா? அல்லது தமிழீழத்தின் குடிமக்களா? என்ற கேள்வி பல தமிழர்களிடத்தில் எழுந்துள்ளது என்று அவர் கூறியுள்ளார். (ந-5)

# தமிழரின் ஆயுதப்போராட்டத்தை அரசு நியாயப்படுத்தியுள்ளது

## சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை

(யாழ்ப்பாணம்)

தமிழர்கள் கொழும்புப் பகுதிகளிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டு அவர்களது தாயகமான வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர். இந்தச் செயற்பாடானது தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தின் உண்மைத்தன்மையை வெளிப்படையாக சர்வதேசத்திற்கு சுட்டி நிற்கின்றது. இவ்வாறு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழ் மக்கள் வேறு; புலிகள் வேறு. தமிழ் மக்களை புலிகளின் பிடியிருந்து மீட்பதாக உலகை ஏமாற்றி மறுபுறம் தமிழ் மக்களை திட்டமிட்டு இனச்சுத்திகரிப்பு செய்து வருகின்றது. இதன் உச்சக் கட்டமாகவே தேசியப் பாதுகாப்பிற்கு தமிழர்கள் அச்சுறுத்தலாக இருப்பதாகக் கூறி கொழும்பு பகுதிகளிலிருந்து தமிழர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

இந்தச் செயலை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். மறுபுறம் தமிழர்கள் கடத்தப்பட்டும் கொலை செய்யப்பட்டும் கப்பம் வேண்டப்பட்டும் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இது தொடர்பாக இதுவரை எதுவித உருப்படியான விசாரணைகளையோ நடவடிக்கைகளையோ எடுக்காமல் விசாரணைக்குழுக்களை அமைத்துள்ளதாக கூறி உலகை அரசு ஏமாற்றி வருகின்றது.

எனவே இனியும் தாமதியாமல் சர்வதேசம் தமிழ் மக்கள் பிரச்சினையில் தலையிட்டு உடனடியாக தமிழ் மக்களுக்கான நீதியான தீர்வை வழங்க முன்வரவேண்டுமென தமிழ் மக்கள் சார்பாகவேண்டுகோள் விடுக்கின்றோம். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# தமிழ் மக்கள் ஓரணியில் திரளவேண்டும் இல்லையேல் பிரஜாவுரிமை கூட பறிக்கப்படலாம்

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து தமிழ் மக்கள் பல நூற்றுக்கணக்கானோர் சுய விருப்பின்றி வலுக்கட்டாயமாக தமது தாயகப் பிரதேசமான வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு திருப்பி அனுப்பப்பட்ட விடயத்தை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

அவசியதேவைகள் மற்றும் பாதுகாப்பு நிமிர்த்தம் தங்கியிருந்த அப்பாவி மக்களை வெளியேற்றியமை மிகவும் அநாகரிகமான மோசமான மனித உரிமை மீறலாகும். இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; தமிழ் மக்கள் இந்த நாட்டின் குடிமக்களாக கௌரவிக்கப்படுவதில்லை என தமிழ் நியாயத்தரப்புக்களின் ஒலிகளை செயன்முறை வடிவில் இன்று இலங்கை அரசு உண்மைப்படுத்தியுள்ளமை சர்வதேச ரீதியான பயன்மிக்க கவனஈர்ப்பை தமிழ் மக்கள் மீது ஏற்படுத்தியுள்ளது.

இந் நிலையில் தமிழ் மக்களை குறிப்பாக வடக்குக் கிழக்கு மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக அரசிலும் அதற்கு வெளியேயும் அரசியல் பணிபுரியும் தமிழ் அரசியல் தலைவர்களுக்கு இது மிகப் பெரும் அவமானமாகும்.

எனவே அவர்கள் தமது பதவிகளை விட்டு விலகுவதே அரசு மீது எமது எதிர்ப்பைக் காட்ட தக்க வழியென நாம் எண்ணுகின்றோம். இலங்கையின் பிரஜைகள் சிங்களவர்கள் மட்டுமே என்றும் இன வாதக்கொள்கை வலுப்பெறும் வேளையில் நடைபெற்ற இச் சம்பவம் மேலும் பல மோசமான பின்னடைகளை சமாதான வழித்தீர்வில் ஏற்படுத்தும்.

இந்த நிலையில் தமிழ் மக்கள் அனைவரும் அரசியல் மற்றும் கொள்கை தனிப்பட்ட வேறுபாடுகளை மறந்து ஓர் அணியில் திரண்டு நியாயத்தீர்வுக்காக குரல் கொடுக்க முன்வரவேண்டும்.

இல்லாது போனால் எதிர்காலத்தில் இலங்கை தமிழர்களின் பிராஜாவுரிமை பறிபோகும் வாய்ப்புக்கள் கூட எழுவதற்கு இடமுண்டு. (ந)

## துணைவேந்தர் பதவிக்கு...

விஞ்ஞானத்துறைத் தலைவர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் மற்றும் பொறியியலாளர் இராஜரட்ணம் ஆகியோரே விண்ணப்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் பேராசிரியர் குமாரவடிவேல் நான்காவது முறையாகவும் பேராசிரியர் எஸ்.கந்தசாமி இரண்டாவது முறையாகவும் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் முதலாவது முறையாகவும் பொறியியலாளர் இராஜரட்ணம் இரண்டாவது முறையாகவும் துணைவேந்தர் பதவிக்குப் போட்டியிடுகின்றனர்.

இந் நால்வரில் மூவரை சிபார்சு செய்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு யாழ்.பல்கலைக்கழகப் பேரவை அனுப்பி வைக்கும்.

பேரவையின் சிபார்சுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேலதிக சிபார்சு அளித்து மூவரின் பெயரினையும் துணைவேந்தர் தெரிவிற்காக ஜனாதிபதிக்குத் சமர்ப்பிக்கும் மூவரில் ஒருவரை துணைவேந்தராக ஜனாதிபதி நியமிப்பார். (ந-5)

## மனித உரிமையை மீறும் செயல் நோர்வே அரசாங்கம் கண்டனம்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து தமிழர்களை வெளியேற்றியிருப்பது அனைத்துலக மனித உரிமைச் சட்டங்களை மீறியதாகும் என்று நோர்வே அரசாங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகம் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

கொழும்பில் நேற்று முன்தினம் திடீரென தமிழர்கள் தாங்கள் தங்கியிருந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டமைக்கு நோர்வே கண்டனம் தெரிவிக்கின்றது.

பொலிஸாரின் இந் நடவடிக்கையானது அப்பட்டமான அனைத்துலக மனித உரிமைச் சட்டங்களை மீறியதாகும். அரசாங்கம் பாதுகாப்புத் தொடர்பில் கவலை கொள்வது நியாயமானதுதான்.

அதேபோல் அதன் மக்களினது பாதுகாப்புக்கும் உத்தரவாதம் அளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய உரிமையும் அதற்குண்டு.

இத்தகைய ஒதுக்கல் செயற்பாடுகளானது தமிழர்களை மட்டுமல்ல எந்தவொரு இனக்குழு மீதும் மேற்கொள்ளப்படுதல் என்பது அனைத்துலக மனித உரிமைச் சட்டங்களுக்கு எதிரானது.

கொழும்பிலிருந்து தமிழர்களை பலவந்தமாக வெளியேற்றும் நடவடிக்கையை நிறுத்த வேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். வெளியேற்றப்பட்ட தமிழர்கள் மீண்டும் கொழும்பு திரும்ப அனுமதிக்க வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## புத்தளத்தில்...

சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இச்சடலங்கள் இதுவரை அடையாளம் காணப்படாத போதிலும் கொழும்பு மற்றும் பிற இடங்களில் அண்மைக்காலங்களில் கடத்தப்பட்டு காணாமல் போனோரினதாக இருக்கலாம் என பலவேறு தரப்பினர் மத்தியில் ஊகங்கள் நிலவுகின்றன. (ந-3,5)

## பொலிஸ்...

யிலான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும் படியும் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அத்துடன் இந்த செயற்பாட்டினை நடைமுறைப்படுத்தும்போது அரச அதிகாரிகள் அவர்களது அதிகாரத்தை மீறிச் செயற்பட்டிருக்கின்றார்கள் என்பது குறித்து தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முழுமையான விசாரணை செய்யப்படும் அவ்வாறு யாராவது செயற்பட்டிருக்கும் பட்சத்தில் அவர்கள் மீது எடுக்கக் கூடிய ஒழுங்கு நடவடிக்கை குறித்தும் விளக்கம் தரும்படியும் ஜனாதிபதி உத்தரவிட்டிருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-3,5)

## தமிழர்கள் வெளியேற்றப்பட்டதற்கு ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்டதற்கு அமெரிக்காவைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியமும் கண்டனம் தெரிவித்துள்ளது.

தமிழர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமை அனைத்துலக மனித உரிமைச் சட்டவிதிகளை மீறும் செயல் என ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர்கள் வெளியேற்றப்பட்டதை அவர்களுக்கு வழங்கப்பட்ட 'ஒட்டுமொத்த தண்டனை' என பல உலக நாடுகளும் மனித உரிமை அமைப்புக்களும் தமது கடுமையான கண்டனத்தை வெளியிட்டு வருகின்றன. (ந-5)

## ஜனாதிபதியின்...

அரசு வேண்டுகோளை முன்வைப்பதை அமெரிக்கா புரிந்து கொண்டு ஆதரிக்கின்றது. ஆனால் 25 ஆண்டு கால தேசிய இனப் பிரச்சினைக்கு தேசிய அளவிலான ஒருமித்த கருத்தை உருவாக்க முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் நிலையில் இந்த நடவடிக்கையானது இனப்பாகுபாட்டை மேலும் அதிகரிக்கத்தான் செய்யும்.

கொழும்பிலிருந்து தமிழர்களைப் பலவந்தமாக வெளியேற்றுவதை அரசாங்கம் உடனே நிறுத்த வேண்டும். ஏற்கனவே வெளியேற்றப்பட்ட மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## விரும்பிய...

புடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா காமினி மகாவித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த இவர்களை அவர்கள் விரும்பும் இடங்களுக்கு அனுப்பி வைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-3,5)

## தமிழர்களை வெளியேற்ற...

விசாரணைக்கு எடுத்துக் கொண்ட மூன்று உயர் நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட அமர்வு இடைக்காலத் தடையை விதித்துள்ளது.

அத்துடன்எதிர்வரும் 22 ஆம் திகதி மீண்டும்இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அதுவரை பொலிஸ் மா அதிபர் மற்றும் வெள்ளவத்தை, புறக்கோட்டை, பேரியகொட, வத்தளை போன்ற பகுதிகளின் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளை தமிழர்களை பலவந்தமாக வெளி யேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது எனவும் இது தொடர்பாக பிறப்பிக்கப்படும் உத்தரவுகளை நிறைவேற்றக் கூடாது எனவும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத் தலைவர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

அத்துடன் வெளியேற்றப்பட்ட தமிழர்கள் மீண்டும் கொழும்புக்கு வரும்போது பொலிஸார் அனுமதிக்க வேண்டும் எனவும் அத்தீர்ப்பில் கூறப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனுதாரர்களான மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இவ் வழக்கின் பிரதிவாதிகளாக பொலிஸ் மா அதிபர் மற்றும் தமிழர்கள் வெளியேற்றப்பட்ட பகுதிகளின் பொலிஸ் நிலை பொறுப்பதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைத் தளபதிகள் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரை குறிப்பிட்டுள்ளது. (ந-5)

## தமிழர்களை வெளியேற்றியதற்கு...

கொழும்பு விடுதிகளில் இருந்துதமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டதை அனைத்துக் கட்சியினரும் கண்டித்துள்ளனர். அரசாங்கத்தின் கொடூரமான, மனித உரிமை மீறுகின்ற, ஆட்களைக் கடத்துகின்ற, ஆட்களைக் கடத்தித் தெரியாத இடத்திற்கு அனுப்புகின்ற செயலைக் கண்டித்து நேற்று முன்தினமும் நேற்றும் தொடர்ச்சியாக சர்வதேச சமூகத்தின் காதில் விழக் கூடியதாகக் குரல் எழுப்புகின்றோம் என்றார்.

இதனை அரசாங்கம் கருத்தில் கொண்டு அங்கு கடத்தப்பட்ட மக்களை என்ன காரணங்களுக்காகக் கொழும்புக்கு வந்தார்களோ அக்கடமைகளை நிறைவேற்றுவதற்கு இடமளிக்க வேண்டும்.

இவ்வாறான நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபடாமல் சம்பந்தப்பட்டவர்களுக்குக் கட்டளையிட வேண்டுமென்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் அழைப்பு விடுகின்றோம் என்றார்.

நேற்று முன்தினம் படுமோசமான நிகழ்வை அரசு செய்து முடித்திருக்கின்றது. தமிழர்கள் இந்த நாட்டிலே வாழ முடியாது. தமிழர்கள் கொழும்பிலே வாழ முடியாது என்ற செய்தியினை அரசாங்கமே எடுத்துக்காட்டியுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றஉறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இந் நிகழ்வானது அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களைக் கண்டிக்கின்ற ஓர் நிகழ்வாக நடந்து கொண்டிருக்கின்றது. அரசாங்கமானது தன்னுடைய அராஜகப் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை நிறைவேறும் வரை போராடுவோம் என அவர் கூறினார்.

இந் நடவடிக்கையானது சட்ட விரோதமான செயல். இது ஐக்கியநாடுகள் சபைக் சட்டத்திற்கு எதிராகவும் சர்வதேச தொழிலாளர் சட்டத்திற்கு எதிராகவும் அமைந்துள்ளது என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் தலைவர் குமார் ரூபசிங்க தெரிவித்தார்.

பொலிஸாரும் பொலிஸ் மா அதிபரும் பல்வேறு பொய்களைச் சொல்லி வந்தனர். கடந்த வாரம் இவ்வாறான நடவடிக்கைகளைச் செய்யப் போவதில்லை என பொலிஸ் மா அதிபர் தெரிவித்திருந்தார்.

பொலிஸ் மா அதிபர் தனது கடமையை சரியாகச்செய்ய வேண்டும் என ரூபசிங்க கேட்டுக்கொண்டார். (ந-3)

## தமிழர்கள் வெளியேற்றப்பட்டமை...

செயற்திட்டமும் பாரிய மனித உரிமை மீறலுமாகும். கடந்த அரை நூற்றாண்டு காலமாக இலங்கை அரசாங்கங்களால் தமிழ் மக்கள் இத்தகைய ஒடுக்கு முறைகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

மனித உரிமை நிலைமைகளை மேம்படுத்துமாறு அனைத்துலக சமூகம் குரல் கொடுத்து வரும் நிலையில் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

இலங்கைத் தீவின் மனித உரிமை நிலைமைகள் குறித்து யப்பானிய சிறப்புத் தூதுவர் யசூசி அகாஷி இலங்கையில் விவாதித்துக் கொண்டிருக்கும் போது இத்தகைய செயற்பாட்டை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

தமிழ் மக்களின் மனித உரிமைகள் தொடர்பான அரசாங்கத்தின் உண்மையான நிலைப்பாட்டை அனைத்துலக சமூகம் புரிந்திருக்கும்.

நோயாளர்கள், இளையோர் மற்றும் முதியோரைக் கொடூரமாக தங்கள் வசிப்பிடங்களிலிருந்து வெளியேற்றியிருக்கும் இந்தப் பாரிய மனித உரிமை மீறலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)


Sri Lanka Insurance

**வேலை வாய்ப்பு**

**வடமராட்சி வாழ் இளைஞர், யுவதிகளுக்கு ஓர் பொன்னான எதிர்காலம்**

ஆசியாவிலேயே குறைந்த கட்டுப்பணத்துடன் அதிகளவு போனஸ் கொடுப்பனவினை தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் ஒரே காப்புறுதி நிறுவனமான இலங்கைக் காப்புறுதிக் கூட்டுஸ்தாபனம் 07/06/2007-ல் நெல்லியடியில் திறந்த தனது கிளைக்கு புதிய முகவர்களுக்கான பதவி வெற்றிடங்களை நிரப்பவுள்ளது. 18 வயதிற்கு மேற்பட்ட, G.C.E (O/L) பரீட்சையில் கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்த ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். தகுதியானவர்கள் இன்று 09/06/2007 சனிக்கிழமை காலை 9 மணி முதல் மதியம் 12 மணிவரை சுய விபரக் கோவையுடன் நெல்லியடிக் கிளைக்கு நேரில் சமுகந்தரவும்.

**குறிப்பு:-**

❖ யாழ்ப்பாணக் கிளைக்கான புதிய முகவர் தெரிவு இன்று 09/06/2007 சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் மதியம் 12.00 மணிவரை யாழ்.கிளையில் இடம்பெறும்.

❖ 40 வருடங்களாக யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து சேவையாற்றி வரும் எமது நிறுவனத்துடன் இணைவதன் மூலம் உங்களையும் உங்கள் சமூகத்தையும் வளப்படுத்திக் கொள்ளுங்கள்.

மக்கள் வங்கி முன்பாக
பிரதான வீதி,
நெல்லியடி.(T.P:- 021226 4686)

வீரசிங்கம் மண்டபம்
யாழ்ப்பாணம்.
(T.P:- 021 222 2023)

(C-159)

**யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்**

**அறிவித்தல்**

எதிர்வரும் 10.06.2007 ஞாயிற்றுக்கிழமை முதல் 450 கிராம் நிறைகொண்ட ஒரு றாத்தல் பாணின் சில்லறை விற்பனை விலை ரூபா 33 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத் தருகின்றோம்.

செயலாளர்
யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

(C-157)

**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்**

**அறிவித்தல்**

மருந்தாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை நடைபெறும் தினம் 10/06/2007 அன்றாகும். 09/06/2007 அன்று பரீட்சை நடைபெற மாட்டாது என்பதை எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பணிப்பாளர்
யாழ்.போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.

(C-158)

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்




(C-132)




**நாளை**
யாழ் நகரில் ...

(113)


வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.06.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.